RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ராஜம் கிருஷ்ணனின் வேலி சிறுகதையில் இடர்ப்படும் பாத்திரங்களின் மனவோட்டம்

ச. லட்சுமி [அ, *], மோ. ரூபா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# The Psychological State of Characters Facing Hardships in Rajan Krishnan's Short Story – Veli

S. Lakshmi [a, *], M. Roopa [a]

[a] Department of Tamil and Research Department, Chellammal Women's College, Guindy, Chennai – 600032, Tamil Nadu, India

* Corresponding Author:
durgalakshmi503@gmail.com

Received: 05-12-2025
Revised: 21-02-2026
Accepted: 03-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Tamil short story literature occupies a significant place in reflecting social life and the subtle psychological dimensions of human experience. In this context, Rajam Krishnan is regarded as a distinctive writer in the realm of Tamil short stories and novels. Her short story "Veli" focuses on the familial, social, and psychological challenges faced by a woman who enters into a love marriage and subsequently confronts oppressive realities within marriage. This research paper primarily aims to examine themes such as female identity, silence, family authority, and social control as portrayed in "Veli." The study adopts descriptive and feminist approaches as its methodological framework. It critically analyses the life experiences of the central character, Malathi, highlighting the forms of oppression she encounters and exploring how her silence functions as a reflection of the prevailing social structure. The study argues that Malathi's silence should not be interpreted as a sign of weakness; rather, it emerges as an expression of her psychological suffering and as a subtle form of resistance. Furthermore, the paper sheds light on how the institution of family restricts a woman's individuality and independent thinking, and how social traditions generate psychological pressure in women's lives. Through this analysis, the paper brings out the strong elements of social criticism and feminist thought embedded in Rajam Krishnan's writing. The study contributes a fresh perspective and valuable analytical insights to the field of Tamil short story research.

**Keywords:** Status of Women, Social Mindset, Veli Short Story, Modern Woman.

## முன்னுரை

தமிழ் சிறுகதை இலக்கியம் சமூக மாற்றங்களையும் மனித மனதின் நுணுக்கங்களையும் வெளிப்படுத்தும் முக்கிய வடிவமாக சிறுகதை விளங்குகிறது. குறிப்பாக பல எழுத்தாளர்கள் சமூகத்தின் அடித்தளங்களின் உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளனர். அந்த வகையில் ராஜம் கிருஷ்ணன் தமிழ்ச் சிறுகதை, நாவல் போன்ற இலக்கியங்களில் தனித்த இடம்பெற்றவர். அவரது 'வேலி' சிறுகதை, காதல் திருமணம் செய்த ஒரு பெண் திருமணத்திற்குப் பின் எதிர்கொள்ளும் சமூக, குடும்ப மனநிலைச் சிக்கல்களை மையமாகக் கொண்டுள்ளது. இக்கதை தனிப்பட்ட வாழ்க்கையை மட்டுமல்ல, ஒரு சமூகத்தின் மனநிலையையும் கூறுகிறது. ஒரு பெண்ணின் மௌனம் அவளது வேதனையின் வெளிப்பாடாக அமைகிறது. சமூக மற்றும் பெண்ணிய கோணங்களில் ஆராய்கிறது.

## ராஜம் கிருஷ்ணன் - ஆசிரியர் குறிப்பு

ராஜம் கிருஷ்ணன் தமிழின் முக்கிய பெண் எழுத்தாளர்களில் ஒருவர். இவர் நாவல், சிறுகதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு எனப் பல துறைகளில் சிறந்து விளங்கியவர். கிராமிய வாழ்க்கை, சமூக அநீதி, மனித உறவுகள், பெண்களின் மன உணர்வு ஆகியவை இவரது படைப்புகளில் மையமாக உள்ளது. இவர் நேரடியாக சென்று கள ஆய்வு செய்து நூல்களை எழுதியுள்ளார்.

## திருமணத்திற்குப் பின் பெண்ணின் நிலை

காதல் திருமணம் பெண்ணுக்குச் சுதந்திரத்தை வழங்கும் என்ற நம்பிக்கை சமூகத்தில் நிலவுகிறது. “ஆனால் கரடு முரடான பாதை, கல்யாணத்தில் தொடங்கி தான் நீளுகிறது”[1]. இக்கதை அந்த நம்பிக்கையின் போலித் தன்மையை வெளிப்படுத்துகிறது. மாலதி காதலின் அடிப்படையில் திருமணம் செய்தாலும், திருமணத்திற்குப் பின் அவள் வாழ்க்கை மேலும் சிக்கலாகத் தான் இருந்தது. கணவன் இல்லாத நிலையில் அவள் மாமியார் வீட்டில் தனிமைப்படுத்தப்படுகிறாள். குடும்பத்திற்குள் அவள் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சாதி மற்றும் குல**த்தால்** அவளை மாமியார் வீட்டில் **யாரும்** ஏற்றுக் கொள்ளவில்லை. காதல் ஒரு முடிவல்ல, புதிய போராட்டத்தின் தொடக்கம் என்பதைக் கதை உணர்த்துகிறது. பெண்ணின் கனவுகள் திருமணத்திற்குப் பின் சிதைவடைகின்றன என்று இக்கதையில் வெளிப்படுகிறது.

## சாதி மற்றும் சமூக மனநிலை

"வேலி" சிறுகதையில் ஜாதி வெளிப்படையாகப் பேசப்படாத போதும், ஒவ்வொரு நிகழ்விலும் மறைந்திருக்கும். மாலதியின் குலம் அவளை குடும்பத்தில் முழுமையாக ஏற்காததற்கான முக்கிய காரணமாக அமைகிறது. மாமியார் மற்றும் அண்டை வீட்டு பெண்களின் பேச்சுக்கள் இந்த சாதிய மனநிலையை வெளிப்படுத்துகின்றன. பெண் வாழ்க்கையில் சாதி ஒரு நிரந்தர தடையாக உள்ளது. இக்கதையில் சமூகத்தின் ஆழ்ந்த சாதிய மனநிலையை மறைமுகமாக வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

## குடும்பம் - அதிகாரமும் ஒடுக்கு முறையும்

குடும்பம் என்பது பொதுவாக பாதுகாப்பும் அன்பும் நிறைந்த இடமாகக் கருதப்படுகிறது. ஆனால் இக்கதையில் குடும்பம் ஒரு அதிகாரமாக செயல்படுகிறது. மாமியார் கோமதி குடும்ப அதிகாரத்தின் மையமாக விளங்குகிறாள். மருமகளின் வாழ்க்கை, உடல் உழைப்பு ஆகியவற்**றிலும்** அவர் கட்டுப்பாடு செலுத்துகிறார். நேரடியாக வன்முறை செய்யப்படாவிட்டாலும், மறைமுகமாக வன்முறை தொடர்கிறது. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இந்த அமைப்பின் ஒரு பகுதியாக மாறுகிறார்கள். இதனால் அப்பெண் முழுமையாக அடக்கப்படுகிறாள். இக்கதை குடும்பத்தின் இருண்ட பக்கத்தை வெளிப்படுத்துகிறது.

## பெண்ணின் பொருளாதார மற்றும் உடல் சுரண்டல்

இக்கதையில் பெண்ணின் பொருளாதார மற்றும் உடல் சுரண்ட**லை** தெளிவாகக் காட்டியுள்ளார். மாலதி வேலை செய்யும் பெண்ணாக இருந்தாலும் அவளது சம்பளம் அவளுக்கு சொந்தமாக இருப்பதில்லை. “ஒரு சம்பளம் கூட முழுசாய் இப்படி அவளுடைய அம்மாளிடம் மாலதி கொடுத்ததில்லை. படிப்புக்கும் வேலைக்கும் தகுந்த வேஷமிடத்தான் அவளுடைய சம்பாத்தியம் சரியாயிருந்தது”[2]. குடும்பத் தேவைகளுக்காக அவளது பணம் பயன்படுத்தப்படுகிறது. பொருளாதார சுதந்திரம் அவளுக்கு கிடைப்பதில்லை. கர்ப்ப காலத்தில் கூட அவளது உடலுக்கு பாதுகாப்பு கிடைப்பதில்லை. தாய்மை கூட கட்டுப்பாட்டின் கருவியாகத் தான் மாறுகிறது. பெண்ணின் வாழ்க்கையில் சுரண்டல் எவ்வளவு ஆழமாக இருக்கிறது என்பது வெளிப்படுகிறது. வேலி என்ற தலைப்பு கதையின் மையக் கருத்தை வெளிப்படுத்துகிறது. இதில் ராஜம் கிருஷ்ணன் மனித உறவுகளுக்கு இடையே ஏற்படும் சாதி, மதம், கௌரவம் மற்றும் மரபு போன்ற சமூக தடைகளை கூறுகிறார். வேலி என்பது சாதி, குளம், மதம், மரபு போன்ற சமூக தடைகளி**ன்** அடையாளமாக உள்ளது. மாலதி அந்த வேலியைத் தாண்டி காதல் திருமணம் செய்தவள். ஆனால் சமூக வேலி அவளை விடாமல் தொடர்ந்து சுற்றி நிற்கிறது. அது கண்ணுக்குத் தெரியாததாக இருந்தாலும், அவளது வாழ்க்கையை முழுமையாக கட்டுப்படுத்துகிறது. குடும்பத்திற்குள்ளேயே அவள் சுதந்திரமற்றவளாக இருக்கிறாள். "வேலி" சமூகத்தின் ஒடுக்குமுறையின் குறியீடாக அமைகிறது.

## 'வேலி' - ஒரு சமூக ஆவணம்

'வேலி' சிறுகதை ஓர் இலக்கிய படைப்பு மட்டுமல்ல, அது ஒரு சமூக ஆவணம். ஒரு காலகட்ட பெண் வாழ்க்கையின் உண்மை நிலையை இது பதிவு செய்கிறது. சாதி, குடும்பம், பணம், அதிகாரம் போன்றவை ஒன்றோடொன்று சுட்டிக்காட்டி உள்ளன. எந்த உண்மையும் மறைக்கப்படவில்லை. சமூகத்தின் மனநிலை நுட்பமாக வெளிப்படுகிறது. வாசகனை சிந்திக்கவும் கேள்வி கேட்கவும் தூண்டுகிறது. இதனால் 'வேலி' ஒரு முக்கியச் சமூக ஆவணமாகத் திகழ்கிறது.

## 'வேலி' சிறுகதையில் பெண்ணிய சிந்தனை

'வேலி' சிறுகதை ஒரு வலுவான பெண்ணிய உரையாக விளங்குகிறது. பெண் ஒடுக்குமுறை குடும்பத்தின் உள்ளேயே எவ்வாறு நிகழ்கிறது என்பதைக் காட்டுகிறது. அதிகாரம் ஆண்களிடமிருந்து மட்டுமல்ல, பெண்களிடமிருந்தும் செயல்படுகிறது என்பதை உணர்த்துகிறது. பெண்களே பெண்களை ஒடுக்கும் நிலை வெளிப்படுகிறது. மௌனம் ஓர் அரசியல் செயலாக மாறுகிறது. பெண் வாழ்க்கையின் உண்மை நிலை வெளிச்சத்திற்கு வருகிறது. இவ்வாறு பெண்ணிய சிந்தனை கதையில் கூறியுள்ளார்.

"வேலி" சிறுகதையின் முடிவு எளிமையாகத் தோன்றினாலும், அதில் ஆழ்ந்த வேதனை மறைந்திருக்கிறது. "வேலியும் இல்லை" என்ற வரி வெளிப்படையாக நம்பிக்கையை காட்டுவது போல தெரிகிறது. "வேலியுமில்லை, முள்ளுமில்லை பணத்துக்கு ஒன்றுமே இல்லை"[3]. ஆனால் உண்மையில் ஒடுக்குமுறை தொடர்ந்து நிலவுகிறது. பெண்ணுக்குச் சொந்தமாக எதுவும் இல்லை என்ற உண்மை வெளிப்படுகிறது. பணமும், உரிமையும், பாதுகாப்பும் இல்லாத நிலை காட்டப்படுகிறது. இந்த முடிவு வாசகனை உலுக்கும் தன்மை கொண்டது. கதையின் தத்துவம் முடிவில் தீவிரமாக வெளிப்படுகிறது.

## நவீன பெண்ணின் முரண்பாடு - 'வேலி'

கல்வியும் வேலையும் பெற்ற பெண் நவீன பெண் என அழைக்கப்படுகிறாள். ஆனால் 'வேலி' சிறுகதையில் மாலதியின் வாழ்க்கை அந்த நம்பிக்கையை மறுக்கிறது. அவள் கல்வி பெற்றவளாகவும், வேலை செய்யும் பெண்ணாகவும் இருந்தாலும், குடும்ப கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட முடியவில்லை. நவீனமும் மரபும் அவளது வாழ்க்கையில் மோதுகின்றன. இந்த முரண்பாடு அவளை மன உளைச்சலுக்கு உள்ளாக்குகிறது. அவள் உரிமைகள் நடைமுறையில் மறுக்கப்படுகின்றன. இதன் மூலம் நவீன பெண் நிலையின் போலித்தன்மை வெளிப்படுகிறது.

## முடிவுரை

ராஜம் கிருஷ்ணனின் "வேலி" சிறுகதை ஒரு பெண்ணின் தனிப்பட்ட வாழ்க்கையை மட்டும் சொல்லாமல் அது ஒரு சமூகத்தின் மனநிலையை கூறும் முக்கியமான இலக்கிய கதையாகும். காதல் திருமணம் செய்தாலும், சாதி மற்றும் குடும்ப மரபுகள் பெண்ணை விடாமல் தொட**ராத** போதும் மௌனம், அக்கறை என்ற பெயரில் நிகழும் ஒடுக்குமுறைகள் பெண்ணின் வாழ்க்கையை சிதைக்கின்றது. வேலி சிறுகதை பெண்ணிய சிந்தனையை வலுப்படுத்தும் ஒரு முக்கியமானச் சமூக ஆவணமாகத் திகழ்கிறது.

### References

ராஜம் கிருஷ்ணன் (2016) ராஜம் கிருஷ்ணனின் சிறுகதைகள், சீதை பதிப்பகம், திருச்சி.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License